Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# கோவில் கட்டிடக் கலையில் இசை நுட்பங்கள்

**ப. கோபாலகிருஷ்ணன்**
**தமிழிசைக் கல்லூரி, சென்னை.**
**gopalakrishnanpackrisamy@gmail.com**

47

**ஆய்வு சுருக்கம் :**

கட்டிடக் கலையில், திறமையின் உட்சமாக விளங்குபவை, தமிழர்களின் கோயில் கட்டிடக்கலை. தமிழ் பண்பாட்டின் அனைத்து கூறுகளையும், சிற்பக்கலை வல்லுநர்கள் தங்கள் சாதனையாக வடித்துள்ளனர். தமிழர்கள் அனைத்து துறைகளிலும் கேள்வி அறிவைப் பெற்றிருந்ததால், தத்தம் துறைகளில் அதன் நுட்பங்களை ஆங்காங்கே அமைத்துள்ளனர். தமிழ் பண்பாட்டின் சிறப்பான தமிழிசையின் நுட்பத்தினையும் அறிந்த சிற்பிகள், தமிழக கோவில்களில் இறைவனோடு இசையையும் சேர்த்து வடித்துள்ளனர். அவ்விதமாக, இசைநுட்பங்கள் கொண்ட கட்டிடக் கலையின் சிறப்பினை இக்கட்டுரையில் காணலாம்.

**திறவுச் சொற்கள் :** இசைத் தூண்கள், இசைச் சிற்பங்கள், இசைப் படிக்கட்டுகள், கட்டிடக்கலை நுட்பங்கள், இசை நுட்பங்கள்

**முன்னுரை :**

தமிழகக் கோயில்கள், மக்களுக்கு பல்கலைக் கூடமாக திகழ்ந்தன. புராணங்கள், சமயக் கருத்துகள், மக்கள் வாழ்வியல் போன்றவற்றை வெளிப்படுத்தும் சிற்பங்கள், பண்பாடு சின்னங்களாக இன்றும் காட்சியளிக்கின்றன. இறைவனோடு ஒன்றாக கலந்திட தமிழன் கண்டறிந்த கலைகளில், இசைக் கலையும் ஒன்றாகும். நாள்தோறும் இசையும், நடனமும், நாகசுர மேளமும் முழங்கி, தமிழ் மக்களுக்கு விருந்தளித்த இசைக்கலையின் நுட்பங்களை சிற்பிகள், கட்டிக்கலையின் பல்வேறு வடிவங்களான தூண்களிலும், சிற்பங்களிலும் வருங்கால தலைமுறையினர் அறிந்து கொள்ளும் பொருட்டு வெளிப்படுத்தியுள்ளனர். அத்தகைய, சிற்பக்கலையின் உச்சமான இசைத்தூண்கள், இசையை வெளிப்படுத்தும் சிற்பங்கள், இசை படிக்கட்டுகள் போன்றவற்றைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

**இசைத் தூண்கள் :**

கோயில் கட்டிடக் கலையின் சிறப்புகளில் ஒன்றாக தூண்கள் விளங்குகின்றன. திராவிட கட்டிடக் கலையில், தென்னிந்திய முழுவதும் பல்வேறு சிறப்பு மிக்க கலை நயம் பொருந்திய தூண்கள் கலையின் உச்சமாக அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில், இசைத்தூண்களும் ஒன்றாகும். தமிழகத்தில், பாண்டியர்கள், பல்லவர்கள், நாயக்கர்கள் காலத்திய கட்டிட பாணியில் இத்தகைய தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாயக்கர் கால கட்டிட பாணியில், இது வளர்ச்சியடைந்த நிலையில் காணப்படுகிறது. தமிழகத்தில், திருநெல்வேலி, சுசீந்திரம், மதுரை, அழகர் கோவில், ஆழ்வார் திருநகரி, தென்காசி, தாடிக்கொம்பு, போன்ற தென் தமிழக கோயில்களில் இசைத் தூண்கள் அதிகமாக காணப்படுகிறது. எனவே, இது பாண்டியர் கட்டிடக் கலையில் தோன்றி வளர்ந்துள்ளதை அறிய

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

முடிகிறது.

திருநெல்வேலி மாவட்டம், நெல்லையப்ப சுவாமி கோயிலில் காணப்படும் இசைத்தூண்களே காலத்தில் பழமையானதாக கருதப்படுகிறது.1 இவை, நின்ற சீர் நெடுமாறன் (கி.பி. 7) காலப்பணியாக கணிக்கப்படுகிறது. இங்கு மணிமண்டபத்தில், நடுவில் பெரிய தூண், இதைச்சுற்றி 48 கல் தண்டுகள், ஆகிய ஒற்றைக் கல்லினாலாகிய இசைத்தூண் மணி மண்டபத்தின் இருபுறங்களிலும் காணப்படுகின்றன. இதை, மரக்குச்சியினாலோ, சிறிய கல்லை கொண்டோ தட்டும் பொழுது இனிய ஓசை ஏற்படுகிறது. இது, தமிழ்நாட்டு சிற்பிகளின் திறமையின் உச்சத்தினை உலகிற்கு எடுத்துக்காட்டுகிறது.

திருநெல்வேலி மாவட்டம் தென்காசி காசி விஸ்வநாதர் கோயிலின் (பிற்கால பாண்டியர் காலம் ) சுவாமி சந்நிதி முன்னுள்ள மண்டபத்திலும், பாலமுருகன் சந்நிதி முன்னுள்ள மண்டபத்திலும் இசைத் தூண்கள் காணப்படுகின்றன. ஆழ்வார் திருநகரி ஆதிநாத சுவாமி கோயிலின் வசந்த மண்டபத்திலும், சுசீந்திரம் தாணுமாலயன் கோயிலின் குலசேகர மண்டபத்திலும் இசைத் தூண்கள் காணப்படுகின்றன.

நாயக்க மன்னர் முதலாம் கிருஷ்ணப்பரால் கட்டப்பட்ட மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் வடக்கு கோபுரத்தில் 5 இசைத்தூண்கள் காணப்படுகின்றன. இதில் ச, ரி,க, ம, ப எனும் ஐந்து சுரங்கள் கேட்கும்.2 அது போல, ஆயிரங்கால் மண்டபத்தில் இரு இசைத்தூண்கள் காணப்படுகின்றன. சுவாமி சன்னதியின் கொடி மரத்திற்கு அருகே காணப்படும் கிழக்கு நோக்கிய சிற்பத்தின் கீழே ஐந்து இசைத்தூண்கள் காணப்படுகிறது.

கி.பி. 15, 16 ஆம் நூற்றாண்டின் விஜய நகர காலத்தில் கட்டப்பட்ட கூடலழகர் பெருமாள் கோயிலில், மதுரவல்லித் தாயாரின் சந்நிதியில் இசைத்தூண்கள் அமைந்துள்ளது. இதில், ச, ரி, க, ம எனும் நான்கு சுரங்கள் கேட்கும்.3

அழகர் கோயில், ஆரியன் மண்டபத்தில் இரண்டு இசைத்தூண்கள் காணப்படுகிறது. விஜய நகர பேரரசர் அச்சுதராயர் காலத்தில் கட்டப்பட்டதாக கருதப்படும் தாடிக் கொம்பு சௌந்திரராஜ பெருமாள் கோவிலின், தாயார் சன்னதிக்கு முன்பாக உள்ள அன்ன மண்டபத்திலும் இசைத்தூண்கள் காணப்படுகின்றன. இவை, நாயக்கர் கால கட்டிடக் கலையின் சிறப்பாக விளங்குகிறது.

**இசைப் படிக்கட்டுகள் :**

தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோயிலில், இசைப் படிக்கட்டுகள் காணப்படுகின்றன. இது, சோழர் கால கட்டிடக்கலையின் சிறப்பாக திகழ்கிறது. கோவிலின் நுழைவாயிலின் நந்திக்கு அருகே உள்ள பலிபீடமே இத்தகைய இசைப் படிக்கட்டுகளாக அமைக்கப்பட்டுள்ளன. இதில், ஒவ்வொரு படிக்கட்டும் நுட்பமான இசை ஒலிகளை ஏற்படுத்துகின்றன.

**இசை தரும் குதிரைச் சிற்பங்கள் :**

விழுப்புரம் மாவட்டம், சேந்தமங்கலம் என்ற கிராமத்தில் இந்த குதிரைச் சிற்பங்கள் காணப்படுகிறது. கி.பி.12 - 13 நூற்றாண்டுகளில் காடவ மன்னர்களின் தலைநகரமாக விளங்கிய சேந்தமங்கலம், தற்பொழுது சிறிய கிராமாக உள்ளது. காடவ மன்னர்கள் கட்டிய வானிலை கண்டீச்சுரம் எனும்

கோயிலுக்கு எதிரே உள்ள பெரிய குளத்தின் வடகரையில் உள்ள கருங்கல் மண்டபத்தில், இந்த இசை தரும் குதிரைச் சிற்பங்கள் உள்ளது. இந்த குதிரை சிறிய கல்லினால் தட்டும் பொழுது பல்வேறு விதமாக இசை ஒலிகள் ஏற்படுவதாக கல்வெட்டு ஆய்வாளர் பண்ருட்டி தமிழரசன் அவர்கள் கூறுகிறார்.4 இந்த குதிரைகள் தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**முடிவுரை :**

தமிழக கோயில்களில், காணப்படும் இசைக்கருவிகளின் சிற்பங்கள், பண்டைய இசைக்கருவிகளின் ஆவணமாக திகழ்கின்றன. மேற்கண்ட இசைத்தூண்கள், இசைப் படிக்கட்டுகள், இசைச் சிற்பங்கள் போன்றவை தமிழரின் இசையறிவின் நுட்பத்தையையும், தமிழிசை பெற்றிருந்த சிறப்பினையும் அறிவிக்கும் பண்பாட்டு சின்னங்களாக காட்சியளிக்கின்றன. கட்டிடக் கலையின் பாகங்களான தூண்கள், படிக்கட்டுகள் போன்றவற்றிலும் இசை நுட்பங்களை வெளிப்படுத்திய சிற்பிகளின் அறிவு சிறப்பும், அறிய உழைப்பும், இவ்வுலகம் உள்ளளவும் போற்றப்படும்.

**அடிக்குறிப்புகள் :**

1. பக். 347, தமிழ் நாட்டின் தல வரலாறுகளும் பண்பாட்டுச் சின்னங்களும்
2. கோயில்களில் கல்லிலே இசை வண்ணம் அக். 07, 2020, தினமலர்
3. கோயில்களில் கல்லிலே இசை வண்ணம் அக். 07, 2020 , தினமலர்
4. சிதைந்து வரும் இசை சிற்பங்கள் - 09.6.2010, தினமணி.காம்

**ஆய்வுக்குதவிய நூல்கள், கட்டுரைகள் :**

- வி. கந்தசாமி, 2013 (மூன்றாம் பதிப்பு)
தமிழ் நாட்டின் தல வரலாறுகளும் பண்பாட்டுச் சின்னங்களும்
பழனியப்பா பிரதர்ஸ்
- முனைவர் தி. சுரேஷ் சிவன், அக். 07, 2020
கோயில்களில் கல்லிலே இசை வண்ணம்
temple.dinamalar.com
- சிதைந்து வரும் இசை சிற்பங்கள் - 09.6.2010
dinamani.com